

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், Social Democratic Party of India (SDPI) கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, மாநகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், SDPI கட்சியின் மாநில துணைத் தலைவர்கள் அப்துல் ஹமீத், அச உமர் பாரூக், மாநில பொதுச் செயலாளர்கள் நிஜாம் மொய்தீன், ஏ.கே. அப்துல் கரீம், தலைமை நிலைய செயலாளர் முஹம்மது ரஷீத், மத்திய சென்னை மாவட்ட தலைவர் முஹம்மது இஸ்மாயில் ஆகியோர் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்

# அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கார்த்திக் வி.ஆர்.தொண்டைமான் கழகத்தில் இணைந்தார்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!




சென்னை, ஆக. 7 -

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (06.08.2025) காலை, புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் புதுக்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவருமான கார்த்திக் வி.ஆர்.தொண்டைமான் அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ். ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், கழக அயலக அணி மாநிலச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி முருகன் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

# உலகெங்கும் கலைஞர் புகழ்!



அய்யா கலைஞரே
நினைக்காமல்
இருப்பதில்லை!
உன் நினைவைத் தவிர
வேறு நினைவில்லை !

படித்துபாதியில்
நிறுத்திய நூல்கள்
உன் கண்களைத்
தேடுகிறது !

சலவைக்கு
சென்ற
வேட்டியும் சட்டையும்
உடுத்துவாய் என்று
உன்னைத் தேடுகிறது!

ரேகைகளை
உள்வாங்கிய
அறிவாலயம்
உன் பாதங்களைத்
தேடுகிறது !

அலைகள்
கைகளைத்தட்டி
செல்கிறது
கல்லறைக்குள்ளும்
கவிதைப் பேசுகிறாய் !

அணைந்தப் பிறகும்
முரசொலியில்
நெருப்பு
வீசுகிறாய் !

திரைப்பட
நட்சத்திரங்கள்
மயங்கும்
மந்திரப் புன்னகை !

இளமைப் பலி
முதல்
ஒவ்வொரு
படைப்பும்
பொன் நகை !

தமிழின்
ஊர்வலமே.!
தத்துவத்தின்
நகர்வலமே.!

பொய் வழக்குகள்
உன் கை விரல்களை
நட்டை எடுத்தது !

அடக்கு முறையும்
சிறையும்
உன்னிடம் தேனீர் குடித்தது!

ஈரோட்டு
தீயின் சிறகே!
காஞ்சியின்
கருணைப் படகே !

எழுதவா
எழுந்து வா
என்று
தேடுகிறது உன் பேனா !

இறந்தப் பிறகு
உன்னிடம் மோதியவன்
ஆணா !

இறந்தப் பிறகும்
எதிரிகளைக் கதறவிட்டு
வென்றாய் ஆனா !

மொத்தப்பகைவரை
உன் ஒத்த மகன்
தலைவர்
மு.க.ஸ்டாலின்
வெல்லுகிறார் !

அய்யா கலைஞரே
ஒன்றியமெங்கும்
உன் புகழை
சொல்லுகிறார் !

ஆதிக்கச் சாதியிடம்
குனியாத
மு.க. ஸ்டாலினுக்கு
நிகர் எவர் !

எவரும் தொட முடியாத
அணுமின்
நிலையத்தின்
பவர் அவர் !

தலைவா
நினைவு நாளில்
தலைவரோடும்
உன் பேரனோடும்
நின்று
வணங்குகிறோம் !

உன்னோடு
வாழ்ந்த நாட்களுக்கு
பூக்களைத்
தூவுகிறோம்!

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



